14.06.2024 MCOP No.1/2021

சாட்சி : PW.1 கனகவள்ளி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. 2, 3 மனுதாரர்கள் என்னுடைய மகன்கள். அவர்களுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. என் கணவர் தச்சு வேலை பார்த்துவந்தார் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. சம்பவம் நடந்த இடம் அகலமான சாலை. 2ம் மனுதாரர் B.E படித்துள்ளார். 3ம் மனுதாரர் B.Com படித்துள்ளார். ஆனால் வேலை பார்க்கவில்லை. என் கணவர் சென்ற இருசக்கர வாகனத்தை ஆறுமுகம் என்பவர் ஓட்டிச் சென்றார். அவர் தலைக்கவசம் அணிந்து சென்றாரா என்று எனக்குத் தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் அரசு பேருந்தை சாலை விதிகளை பின்பற்றி அகலமான சாலையில் ஓட்டிச் சென்றபோது என் கணவர் சென்ற வாகனம் தான் சாலை விதிகளை கடைபிடிக்காமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் தனக்கு முன்னால் சென்ற பள்ளிப் பேருந்தை முந்திச் சென்று பிரதான சாலையில் இருந்து இடது புறம் பிரிவுச் சாலைக்கு செல்வதற்காக குறுக்கே சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டுத் தொகை மிகவும் அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் பயணம் செய்த ஸ்கூட்டி வாகனம் சாலையில் ஓட்டத் தகுதியற்றது என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.